RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# இராஜம்கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம்

**மா. மாதேஷ் [அ] *, கி. புவனேஸ்வரி [அ]**

[அ] தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை-600 032., தமிழ்நாடு, இந்தியா

# Feminism in Rajam Krishnan's Novels

**M. Madhesh [a, *], K. Bhuvaneswari [a]**

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Chennai 600 032, Tamil Nadu, India

*Corresponding Author:
drmadheshm@gmail.com

Received: 08-12-2025
Revised: 01-03-2026
Accepted: 07-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan occupies a significant place in twentieth-century Tamil novel literature for her profound portrayal of social realities. Her novels realistically depict the everyday struggles of women, familial and social restrictions, economic oppression, and the psychological suffering experienced by women within a patriarchal framework. This study examines the feminist perspectives articulated in Rajam Krishnan's novels as its primary subject of analysis. In this research, novels such as Manuda Makarandhangal and Suzhalil Mithakkum Deepangal are taken as primary sources. The study analyzes, from a feminist standpoint, the ways in which female characters seek their identity, endure familial responsibilities, confront constraints imposed by religious and social traditions, and express selfhood through silent forms of resistance. The central aim of this research is to explore how Rajam Krishnan articulates women's lived experiences and feminist consciousness through realistic narrative representations.

**Keywords:** Feminism, Rajam Krishnan, Tamil Novels, Women's Life, Patriarchy,

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண் சமுதாயத்தின் மறுமலர்ச்சி மற்றும் அறிவு எழுச்சி என்ற பெண் முன்னேற்றமாகும். பெண்களை அடிமைகளாகக் கருதுவதைத் தவிர்த்து அவர்களை மனிதர்களாகக் கருதவேண்டும் என்பதே பெண்ணியவாதிகளின் கருத்தாகும். பெண்குலத்தின் சீரான வாழ்வுக்கென குரல் கொடுப்போர் இன்று மிகப்பலர். அத்தகையோருள் இராஜம் கிருஷ்ணனும் ஒருவராவார். இருபதாம் நூற்றாண்டில் எழுத்து வேள்வியைத் தொடங்கி, இந்த நூற்றாண்டிலும் சாதனை படைத்த இணையற்ற பெண்மணியான இவர், பிற பெண்கள் காதல் கதைகளும் குடும்பக் கதைகளும் படைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், நேரடியாகக் களத்திற்குச் சென்று தகவல் திரட்டி புதினங்களை எழுதியவர். இவரது கதைகளில் புனைவுகளைவிட ஆய்வுப் பார்வையும் சமுதாய நோக்குமே மேலோங்கி இருக்கும். இவருடைய புதினங்களில் காணப்படும் பெண்ணியம் குறித்து ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது உலகளாவியது. பெண்களின் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதோடு, பெண்களை அடிமைத்தளையிலிருந்தும் விடுவிப்பது போன்ற பெண்ணுரிமைத் தொடர்பான சிந்தனைகளில் கவனம் செலுத்துவது. பெண்ணுரிமை என்பது ஆண்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துவதோ, மரபுகளை உடைத்துக்கொண்டு புதுவிதமாக வாழ்வது என்றோ, பெண்கள்தான் உயர்வு என்று நிலைநாட்டுவது என்றோ, பெண்கள் மட்டுமே பங்குபெற வேண்டிய உரிமைப் போர் என்றோ கருதிவிடக்கூடாது. மனிதம் என்ற உரிமையைப் புரிந்துகொள்ளும் போதுதான்

பெண் உரிமையையும் புரிந்து கொள்ளமுடியும். எண்ணிலடங்காத உயர் பரிமாணங்களை உள்ளடக்கியது மனிதம். மனிதம் என்பது ஆண், பெண் என்ற இருசாராரையும் குறிக்கும்.

## சமயக்கொடுமை

இந்து மதமும் அதன் அடிப்படையிலான பண்பாடும் பெண்கள் பற்றி இருவேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. பெண்களைத் தெய்வமாகப் போற்றும் கருத்தியல் நிலைப்பாடும், அதற்கு நேர்மாறாக அவர்களை அடிமைகளாக நோக்கும் நடப்பியல் நிலைப்பாடும் ஒரு சேரக்காணப்படுகின்றன. இந்து சமயத்தில் பெண்ணுக்கென்று தனித்த இடமோ, இயக்கமோ இல்லை. அவள் இளமைப் பருவத்தில் தந்தையைச் சார்ந்தும், திருமணத்துக்குப் பின் கணவனைச் சார்ந்தும், கணவன் இறப்புக்குப்பின் மகனைச் சார்ந்தும் வாழவேண்டியவள் என்பது மனுதர்மம் கூறுகிறது. இராஜம் கிருஷ்ணனின் 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் கணிகையர் குலத்தில் பிறந்த மதுரம் தன்குல வழக்கத்திற்கு மாறாக மணமுடித்த கணவனுடன் குடும்பம் நடத்துகிறாள். அந்த ஊர் மடத்தில் தங்குவதற்குச் சங்காராச்சாரியார் சுவாமிகள் தங்கியிருக்க வருகையில் மதுரம் கணிகையர் கட்டும் மாம்பழக்கட்டுப் புடவையுடன், வீட்டு வாசல் திண்ணையில் நிற்க, அவள் கணவன் பஞ்சக்கச்சம் வைத்து வேட்டி கட்டிப் பூரண கும்பத்துடன் சாமியாரை வரவேற்கிறான். "வக்கீல் சார் கேட்கிறார். ஏண்டா சொல்லலை? சாமிநாதன் அகமுடையாள் மாம்பழக்கட்டும் தானுமா நிக்கறா. இப்ப பாவமாயிட்டது. சுவாமிகள் பிச்சை (உணவு) எடுக்காம மூணுநாள் நிராஹாரமாக இருக்கிறதுன்னா பாவம் ஆரைச்சாரும்? உம்மைச் சொல்லி குத்தமில்லை தெருவில் விட்டு வச்சது தப்பு என்று வெடித்தான்" என்று வரும் அடிகள் பெண்ணின் சமய இழிவைக் காட்டுவதாக உள்ளது. "துர்க்கைக்கு ராகு கால அர்ச்சனை பண்றேன். ஆடிமாசம் வெள்ளிக்கிழமையில் நீ வந்து ஒரு வெள்ளியிலானும் எலுமிச்சம்பழ விளக்கேற்றிவை. சுவாமிகளே சொல்லியிருக்கிறார். வர தைக்குள்ள கல்யாணம் ஆகும்னு. .அந்தச் சூழலில், அந்தப் பராமரிப்பில், அந்த நம்பிக்கையில் இவளுக்கு அறிவு பூர்வமான சிந்தனை எப்படி உதிக்கும்?"[1] என்ற வரிகளானது பெண் மணவாழ்க்கைக்காகவே படைக்கப்பட்டுள்ளார் எனவும், அது தாமதமானால் விரைவில் நிறைவேறுவதற்காக சுவாமிகள் வழிகூறியுள்ளார் எனவும், அதனை மறுபேச்சின்றி பெண் கடைபிடிக்க வேண்டும் எனவும் கூறுவதிலிருந்து பெண் சமய அடிப்படையில் எவ்வாறு சிந்தனை இன்றிக் கட்டுப்படுத்தப்படுகிறாள் என்பது புலனாகின்றது. "பெண்ணுக்குச் சிந்தனை உரிமை கொடுக்கக் கூடாது என்று போதித்தது மதம்; அதுவே அவள் அடிமைத்தனத்தின் அடிப்படை."[2] என்று மதத்தால் பெண் அடிமையானதை பெரியார் தன்னுடைய பெண் ஏன் அடிமையானாள் என்ற நூலில் குறிப்பிடுகிறார். இந்து மதத்தில் இருந்து பிறந்தவைகளாகக் கருதப்படும் புத்தமதம், சமணமதம், வீர சைவம், சீக்கிய மதம் போன்றவற்றில் பெண்களின் நிலையில் ஒரு சில முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், பெண்களின் சமூக மதிப்பு பெரிதாக மாற்றம் பெறவில்லை. பெண்களை அடிமைப்பொருளாகவே பலரும் கருதி வருகின்றனர். மேலும், பெண்கள் வரதட்சனை, மாமியார் கொடுமை போன்றவற்றால் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டவள், ஆண் குடும்பத் தலைவன், பெண் அவனைச் சார்ந்தவள், சமையலறையிலும், குழந்தை பெறுவதிலும், வளர்ப்பதிலும் மட்டுமே தொடர்புடையவள், மொத்தத்தில் பெண் மனைவியாய், தாயாய், சகோதரியாய் ஆணைச் சார்ந்தே பார்க்கப்படுகிற சமூகப் பண்பாட்டுச் சூழலே நிலவுகிறது. இராஜம்கிருஷ்ணனின் 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் பாட்டி மதுராம்பாள் தன் கணவன் தனக்கு வீட்டுக் கடமைகளில் உதவி செய்ததை மனநிறைவுடன் பேத்தியிடம் நினைவு கூர்கிறாள். "உங்க தாத்தா எனக்குப் பிரவசம் பார்க்கவே ஒத்தாசை பண்ணும்படியாக இருந்தது. எனக்குப் புடவை தோச்சுப் போட்டார். வாத்தியாரு பொண்டாட்டிக்குப் புடவை தோச்சுண்டுப் போறார்னு வாய்க்கால் கரையில வம்பு பேசுவாளாம். அவர் பொருட்டாக்கல"[3] என்ற பகுதி இதனை வலியுறுத்தும். வாய்க்கால் கரையில் நின்றவர்கள் வம்பு பேசியதற்கு, மனைவி எந்திரம் போல் தன் கணவனின் துணிகளைத் தோய்க்கலாம். மனைவியின் புடவையைக் கணவன் துவைத்தல் கூடாது என்ற மரபு வழிப்பட்ட ஆணாதிக்கச் சமூகப்பார்வையே காரணமாகும். ஆண் வீட்டில் உதவி செய்தால் அது பெருமை பெண் செய்தால் அது அவளின் கடமை."[4] என்கிறார் இராஜம் கிருஷ்ணன்.

## குழந்தை வளர்ப்பு

பெண்மையின் இயல்புகள் தாய், மனைவி, மகள், சகோதரி, நாத்தனார், மருமகள், மாமியார் போன்ற உறவு நிலைகளில் பொருந்தக் கூடியது. பெண்கள் குறிப்பிட்ட படிநிலையில் கடமைகளை நிறைவேற்ற செயல்படுவதோடு, தங்களுடைய உரிமைகளையும் வரையறை செய்கின்றனர். பெண்களின் பங்கு நிலைகளில் தாயின் பங்கு நிலையே மிக உயர்ந்த இடத்தைப் பெறுகிறது. தியாகம், பொறுமை, தன்னலமின்மை ஆகிய பண்புகள் தாயின் உயர்ந்த குணங்களாகப் போற்றப்படுகின்றன. "தாய்மை என்பது மனப்பண்புகளின் மலர்ச்சியும் உன்னதங்களும் சேர்ந்த ஒரு மாண்பாகும்"[5] என்கிறார் ராஜம்கிருஷ்ணன்.

## அதிக பணிச்சுமை

ஒரு தேசத்தின் விடுதலை என்பது அத்தேசத்தில் உள்ள பெண்களின் விடுதலையில்தான் உள்ளது என்றார் காந்தியடிகள். பெண்கள் விடுதலைப் பெற வேண்டுமானால் சாதி, மதம், கடவுள், வருணம் ஆகியவை ஒழிய வேண்டும். அப்போதுதான் பெண்கள் முன்னேற்றமும், அதன் வழி நாட்டின் முன்னேற்றமும் சாத்தியாகும் என்று வலியுறுத்தியுள்ளார் பாரதிதாசன். இன்று அறிவியல் முதல் அரசியல் வரை நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. குடும்பப் பொறுப்பு முதல் சமூகப் பொறுப்புவரை பெண்கள் எண்ணற்ற சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். வீட்டின் நலத்தோடு, நாட்டின் நலத்துக்கும் தொண்டு செய்து வருகின்றார்கள். வீட்டினில் ஆணுக்குப் பெண் துணை; வெளியில் நாட்டுக்கும் அவள் துணை."[6] பெண் வீட்டுப் பணியும் சமூகப் பணியும் ஒரே நேரத்தில் சுமப்பவள் என்பதை பாரதியார் தன்னுடைய பாடலில் சுட்டுகிறார்.

## முடிவுரை

மனித சமுதாயத்தில் சாதிகளும் வருணங்களும் தோன்றிப் பிளவுபட்ட சமுதாயங்களை உருவாக்கத் துவங்குவதற்கு முன்பே பெண் அடிமைப்பட்டுவிட்டாள் எனலாம். பெண் என்பவள் உடல் சார்ந்து, உளம் சார்ந்து கணவனுக்கும் அவன் வீட்டாருக்கும் எந்த நிலையிலும் உழைக்க விட்டுக்கொடுக்க கட்டுப்படுவதே ஞாயம் என்ற தருமமே இந்த சமுதாய அமைப்பின் ஆணி வேராகத் திகழ்கின்றது. ஆண்வர்க்கம் பெண் இனத்தை பல கூறுகளாக்கி, அவர்களது உணர்வுகளை அழித்து ஆளுகைச் செய்து கொண்டிருக்கிறது என்பதையே இராஜம்கிருஷ்ணன் தமது புதினங்களின் வழி காட்டியுள்ளார்.

## References

Maanudaththin magarandhangal, (1984), Paari Nilayam, Chennai.

Kaalandhorum Pengal, (2014) Kalachuvadu Publications.

Pen En Adimaiyaanal, 2nd Edition (2013): Ethir Veliyeedu Publications.

Bharathiyar's Poems, Vaanavil Publications, Chennai.

Ilakkiya Marabu, Paari Nilayam, Chennai.

Puthiya Tamil Ilakkiya Varalaaru, Sahitya Akademi, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License